பக்கங்கள் 20

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 30 வியாழக்கிழமை 15.08.2024 | அதிர்வு 013



## ரணில், சஜித் அடுத்தடுத்து யாழ். விஜயம்

(ந.லோகதயாளன்)

ஜனாதிபதி வேட்பாளர்களான தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் இம்மாத இறுதியில்

05▶



# ராஜபக்ஷ சகோதரர்கள் நாமலுக்காகக் களத்தில்!

+ பொதுக் கூட்டங்கள் தோறும் மஹிந்தர்
+ பௌத்த விஹாரைகள் எங்கும் கோட்டா
+ கட்சியின் அலுவலகத்திலிருந்து பஸில்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கி இருக்கும் இளம் ராஜபக்ஷவான நாமலுக்கு ஆதரவு திரட்டுவதற்காக மூத்த ராஜபக்ஷ சகோதரர்கள் அனைவரும் முழு வீச்சில் களத்தில் இறங்குகின்றனர் எனத் தெரிகின்றது.

நாளை முதல் அடுத்த ஐந்து வாரங்களுக்கு அவர்கள் நாடளாவிய ரீதியில் சூறாவளிப் பிரசாரத்தில் ஈடுபடுவர் எனக் கூறப்படுகின்றது.

04▶

## 13 இன் அதிகாரங்கள் மீளப் பறிக்கப்படாதவாறு அரசமைப்பு மாற்றியமைக்கப்பட்டே தீரவேண்டும்

### ரணிலிடம் சுமந்திரன் வலியுறுத்து

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் பறிக்கப்பட்ட அதிகாரங்களைத் திருப்பித் தருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியளித்திருக்கும் நிலையில், அவ்வாறு வழங்கப்படும்அதிகாரங்கள்மீண்டும் பறிக்கப்படாதவாறு அரசமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும்

05▶






ஊடக முக்கியஸ்தர்களை நேற்றிரவு விருந்துடன் சந்தித்தார் மொட்டுக்கட்சி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ. ஒரே சமயத்தில் அருகருகே இருந்த நட்சத்திர ஹோட்டல்கள் இரண்டில் சந்திப்பு. கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் அச்சு ஊடகப் பிரபலங்களுடன். அருகில் கிங்ஸ்பெரி ஹோட்டலில் இலத்திரனியல் முன்னிலையாளர்களுடன்.

மஹிந்தரும் நாமலும் கட்சிச் செயலாளர் சாகர காரியவசமும் இரண்டு இடங்களிலும் மாறி மாறிப் பிரசன்னமாகி ஊடக நண்பர்களுடன் சரளமாக

05▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# விஜயதாஸ ராஜபக்ஷவை கைவிட்டுவிட்டு மாற்றுத்தரப்புடன் இணைகிறார் மைத்திரி

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



"ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேன, விஜயதாஸ ராஜபக்ஷவை கைவிட்டு பிறிதொரு தரப்புடன் இணையவுள்ளார். அவர் கட்சியையும் சீரழித்து இறுதியில் விஜயதாஸ ராஜபக்ஷவையும் நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளார் என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பம்பலப்பிட்டி லோரிஸ் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

"எமது அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் எவருக்கும் குறை கூறிக்கொண்டிருக்க முடியும். ஆனால் அவற்றை அவர்களால் முறையாக முன் கொண்டு செல்ல முடியாது. எதிர்க்கட்சிகள் எமது வேலைத்திட்டத்தை ஆதரிக்காவிட்டாலும், அவற்றைச் சீர்குலைக்கும் வகையில் செயற்படாமல் இருந்திருக்கலாம்.

எனவே, பொய் வாக்குறுதிகளை நம்பி இனியும் மக்கள் ஏமாந்து விடக் கூடாது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றக் கூடியவர் என்பதை மக்கள் தற்போது நேரடியாக உணர்ந்திருப்பார்கள். நாட்டு மக்கள் இம்முறைத் தேர்தலில் வெற்றி பெறுபவருக்கு அன்றி தோற்பவருக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

பிரதான வேட்பாளர்கள் இருவரைத் தவிர ஏனைய அனைத்து வேட்பாளர்களும் தமது கட்டுப்பணத்தை இழப்பர். வாக்குகளைச் சிதறடிப்பதற்காகவும் சிலர் போட்டியிடுகின்றனர். மேலும் சிலர் வேட்புமனுத் தாக்கல் செய்யாமல் வேறு தரப்பினருடன் இணைவர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவர் விரைவில் பிறிதொரு தரப்புடன் இணைவார்.

தற்போது அவர் விஜயதாஸ ராஜபக்ஷவை நெருக்கடிக்குள் சிக்க வைத்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் தேர்தலில் வெற்றி பெறுவார். அதனைத் தடுக்க முடியாது. 17ஆம் திகதியின் பின்னர் ரணிலுக்கான அலை வெளிப்படும்."– என்றார்.



# சிகிரியாவில் நேற்று சுற்றுலாப் பயணிகள் 70 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்

சிகிரியாவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 70 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்கானமையை அடுத்து, சிகிரியாவிற்குள் நுழைவது மத்திய கலாச்சார நிதியத்தினால் நேற்றுப் பிற்பகல் இடைநிறுத்தப்பட்டது.

குளவிகளின் அபாயம் காரணமாக நேற்று நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் சிகிரியாவுக்குச் செல்லும் வாய்ப்பை இழந்துள்ளனர் என சிகிரியா திட்ட முகாமையாளர் துசித ஹேரத் தெரிவித்தார்.

26 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் 13 உள்ளூர் சுற்றுலாப் பயணிகளும் காயமடைந்து சீகிரிய பிரதேச வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும்பலர் வைத்தியசாலையில் சிகிச்சைபற்று வெளியேறிவிட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றுலாப் பயணிகள் குளவிகளின் தாக்குதலை எதிர்கொள்வது இதுவே முதல் முறை என்றும் அவர்களில் பெரும்பாலானோர் இந்த சம்பவத்தால் அதிர்ச்சியடைந்துள்ளனர் எனவும் அந்த அதிகாரி கூறினார்.

நிலவும் கடுமையான வெப்பம் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் அதிக வருகையால் குளவிகளின் கூடுகள் கிளர்ந்தெழுந்ததாக நம்பப்படுகிறது.

இதேவேளை, குளவி தாக்குதலின்றி சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும், இல்லாவிடில் பெரும் நஷ்டம் ஏற்படும் எனவும் சுற்றுலா வழிகாட்டிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், குளவிகள் கிளர்ந்தெழும்போது அவற்றை விரட்ட நீராவியை விசிறுவது குறித்து ஆய்வு செய்து வருவதாக திட்ட அலுவலர் தெரிவித்தார்.

பயணச் சீட்டுகளைப் பெற்று அப்பகுதிக்குள் நுழைவதற்கான வாய்ப்பை இழந்த சுற்றுலாப் பபயணிகளுக்கு அவர்களிடன் இருந்து அறவிடப்பட்ட கட்டணத்தை மீளச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.



# நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் நீதி அமைச்சின் கடப்பாடுகள் முக்கியம்

## புதிய நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

"சர்வதேச சமூகத்துடன் செயற்படும்போது நல்லிணக்க செயற்பாடுகள் மிகவும் அத்தியாவசியமாகும். அதேநேரம் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் நீதி அமைச்சின் கடப்பாடுகள் முக்கியமாகும். அதனால் இந்த துறைகளின் செயற்பாடுகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அலி சப்ரி நேற்று முன்தினம் தனது கடமைகளை நீதி அமைச்சில் பொறுப்பேற்ற பின்னர் அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இந்த கலந்துரையாடலின்போது அமைச்சின் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக அவர் கேட்டறிந்தமையுடன் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் நீதிமன்ற அடிப்படை வசதிகளை மேன்படுத்தல், சட்ட மறுசீரமைப்பு செயற்பாடுகள், டிஜிடல் மயமாக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் நடவடிக்கைகள் போன்ற துறைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படவேண்டிய முறை தொடர்பில் ஆலோசனை வழங்கினார். இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில் –

"விரைவாக நிறைவு செய்யப்படவேண்டிய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும். வழக்கு விசாரணை செய்து முடிப்பது மாத்திரமல்ல, நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் நீதி அமைச்சின் கடப்பாடுகள் முக்கியமாகும்.

2020 ஆம் ஆண்டில் இருந்து நீதி அமைச்சின் நடவடிக்கைகளை வேகமாக முன்னெடுத்துச் சென்றோம். விசேடமாக சர்வதேச சமூகத்துடன் செயற்படும்போது நல்லிணக்க செயற்பாடுகள் மிகவும் முக்கியமாகும்."– என்றார்.





## ராஜபக்ஷ சகோதரர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடு முழுவதிலும் தொகுதிக்கு ஒன்று என்ற அடிப்படையில் குறைந்தது 140 பொதுக்கூட்டங்களில் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ நேரடியாகப் பிரசாரத்தில் பங்குபற்றுவார் என அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கூட்டங்கள் யாவற்றையும் கொழும்புக் கட்சி அலுவலகத்தில் இருந்தே இயக்கி ஒழுங்கு செய்யும் நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ முன்னின்று மேற்கொள்வார் எனக் கூறப்பட்டது.

தம்முடையவயதுமற்றும்இயலுமைக்கு ஏற்றவாறு இயன்றளவு கூட்டங்களில் – மாவட்டங்கள் தோறும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்குபற்றித் தனது மகனுக்காகப் பிரசார உரைகளை ஆற்றுவார் என்று தெரிகின்றது.

பௌத்த விகாரைகளில் இன்னும் செல்வாக்குக் கொண்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு முழுவதிலும் உள்ள பௌத்த விஹாரைகளுக்கு நேரில் சென்று தமது பெறாமகன் நாமலுக்காகப் பிரச்சாரம் செய்வார் என்று கூறப்பட்டது. பௌத்த – சிங்களத் தீவிரப் போக்குடையவர்களின் வாக்குகளை நாமலுக்குப் பெற்றுக்கொடுப்பதில் அவர் முனைப்புக் காட்டுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று வேட்புமனுவில் நாமல் ராஜபக்ஷ ஒப்பமிடும் நிகழ்வுக்கு முன்னாள் சபாநாயகரும் மூத்த சகோதரருமான சமல் ராஜபக்ஷ சமுகம் தந்திருக்கவில்லை. அவருக்குச் சுகவீனம் என்று கூறப்பட்டது. எனினும், அவரது மகன் ஷஷீந்திர ராஜபக்ஷ அங்கு பிரசன்னமாகி இருந்தார். இருவரும் கூட நாமலுக்காகப் பிரசாரக் களத்தில் இறங்குவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரையாடினர். இன்று முதல் பிரசார களத்தில் இறங்க இருப்பதால் அதற்கு முன்பு இரண்டு தரப்பாரையும் தனித்தனியே சந்திப்பதற்காக ஒரே சமயத்தில் இரண்டு கூட்டங்கள்.

எனினும் தமிழ் ஊடகப் பிரபலங்களுடன் தனியான – பிரத்தியேகமான – ஒரு சந்திப்பு நடக்கும் என்று நாமல் குறிப்பிட்டார்.

சற்று நேரம் அவருடன் உரையாடினேன். மிகுந்த நம்பிக்கையுடன் களத்தில் இறங்கி இருக்கின்றார் என்பது புரிந்தது. வெற்றி என்பதை விட தனது அரசியலுக்கான முத்திரையை – அத்திவாரத்தை – இந்த தேர்தலில் ஸ்திரமாகப் பதித்து விட வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாக இருக்கின்றார் என்பது புரிந்தது.

நான்கு முனைப் போட்டி தீவிரம் என்றார். நிச்சயம் இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கைதான் ஜனாதிபதியை தீர்மானிக்கும் என்று உறுதிப்பட கூறினார்.

நான் குறுக்குட்டேன்.

"உங்களுக்கு வாக்களிப்போரை அவர்களின் இரண்டாவது வாக்கை – தெரிவை – ஜனாதிபதி ரணிலுக்கு அளிக்க கோருவீர்களா?" – என்று கேட்டேன். சிரித்துக் கொண்டு இரண்டு விடயங்களைச் சொன்னார்.

"ஆம்.இது குறித்து ஜனாதிபதிக்கு நேரில் கூறியுள்ளேன். ஆனால் ஒரு சிக்கல். யாருடைய இரண்டாவது வாக்கை மற்றவருக்கு அளிக்கும்படி கோருவது என்பதுதான் சர்ச்சைக்குரியது. எனக்கு அளிக்கப்படும் வாக்கின் இரண்டாவதை அவருக்கு அளிக்கும்படி நான் கோருவதா? அல்லது அவருக்கு அளிக்கும் வாக்கில் இரண்டாவது தெரிவை எனக்கு அளிக்கும்படி அவர் கோருவதா? என்பதுதான் சிக்கல். அதை இப்போது கூற முடியாது. தேர்தல் இறுதிக்கட்டத்தை எட்டும் போதுதான் அதைத் தீர்மானிக்கலாம்." – என்று கொக்கட்டம் விட்டுச் சிரித்துக் கொண்டு கூறினார்.

அந்தக்கருத்தின்அர்த்தம்ஆழமானது. நான் முந்துவதா அல்லது ரணில் முந்துவதா என்ற கேள்வியின் அடிப்படையில் தான் யாருக்கு இரண்டாவது வாக்கை அளிக்கும்படி யார் கோருவது என்ற விடயம் தங்கி உள்ளது என்பதுதான் அதன் அர்த்தம்.

அதாவது 'நான் ரணிலையும் முந்தி வேனாயின் ரணில் தமக்கு வாக்களிப்போரை இரண்டாவது தெரிவை எனக்கு அளிக்க கோருவதுதானே முறை' என்ற அடிப்படையில் அவரது பேச்சு நியாயம் இருந்தது.

அந்த வகையில் அது சரிதான். அவ்வளவு தூரம் – ரணிலையும் நான் முந்தலாம் என்ற அளவில் – அவரது நம்பிக்கை ஸ்திரமாக உள்ளது.

மற்றொரு விடயத்தையும் அவர் சுட்டினார். நான்குமுனை போட்டி. கடும் இழுபறி.

யாராவது இரண்டு வேட்பாளர்கள் தங்களுக்குள் ஒருவர் ஜனாதிபதி, மற்றவர் பிரதமர் என்று பொருந்திக் கொண்டு, ஒருவர் தனக்கு வாக்களிப்போர் இரண்டாவது வாக்கை மற்றவருக்கு அளிக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தோடு உடன்பாடு கண்டு களத்தில் இறங்கினால், அந்தக் கூட்டு வெல்லும் வாய்ப்புகளும் உண்டு என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அதுவும் உண்மைதான். ஆனால் நெற்றி முட்டுமளவுக்கு எதிரும் புதிருமாக மோதும் பிரதான தரப்புகள் அப்படி தங்களுக்குள் உடன்பாடு காணும் சாத்தியம் இல்லை என்றே தோன்றுகின்றது.

\+ + +

தமிழர் மத்தியில் அரசியல் இயக்கம் ஒன்றைத் தொடக்கிக் காலப் போக்கில் அதை அரசியல் கட்சியாக மாற்றும் எண்ணத்துடன் யாழில் கட்சி ஒன்றின் சில வட்டங்கள் நேற்று ஒரு வீட்டில் பூர்வாங்கக் கலந்தாய்வுக் கூட்டம் ஒன்றை நடத்தின என்று தகவல். மலிந்தால் விவரம் சந்திக்கு – சந்தைக்கு – வரும் அப்போது பார்ப்போம்.

இந்தத் தகவலைச் சொன்ன நண்பர் ஒருவர் "நல்லது. துலைவார் தனி வழி போனால் அந்தக் கட்சியாவது தப்பிப் பிழைத்துத் தேறும்" என்றார்.

உண்மைதான்....!

## 13 இன் அதிகாரங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அதற்குரிய உத்தரவாதத்தை வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று நேரில் வலியுறுத்தினார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை நேற்று முற்பகல் சந்தித்துப் பேசிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அதன்பின்னர் முற்பகல் 11.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள விடயங்களை உள்ளடக்கி அண்மையில் சுமந்திரனிடம் கையளித்த ஆவணத்தை ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் வழங்கியிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேவேளை, அந்த ஆவணத்தில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உருவாக்கப்பட வேண்டிய சட்டங்கள், நீக்கப்பட வேண்டிய சட்டங்கள் குறித்து இருவரும் விரிவாகக் கலந்துரையாடினர்.

அதேபோன்று அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் பறிக்கப்பட்ட அதிகாரங்களைத் திருப்பித் தருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியளித்திருக்கும் நிலையில், அவ்வாறு வழங்கப்படும் அதிகாரங்கள் மீண்டும் பறிக்கப்படாதவாறு அரசமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அதற்குரிய உத்தரவாதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்க வேண்டும் எனவும் இதன்போது சுமந்திரன் எம்.பி. வலியுறுத்தினார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, அதனைச் செனட் சபை மூலமாகச் செய்வதாக அல்லவா ஏற்கனவே கலந்துரையாடினோம் என வினவினார்.

அதனை ஆமோதித்த சுமந்திரன், புதிய அரசமைப்பு தொடர்பில் முன்னர் கலந்துரையாடிய வேளையில், மேற்குறிப்பிட்டவாறு வழங்கிய அதிகாரங்கள் மீண்டும் பறிக்கப்படாமல் பாதுகாப்பதற்குச் செனட் சபையை நிறுவுவது குறித்துத் தாம் பேசியதாகவும், இருப்பினும் அது குறித்து பகிரங்கமாகத் தெரியக்கூடிய வகையில் ஜனாதிபதி உத்தரவாதத்தை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மேலும், தேசிய கொள்கைகள் முழு நாட்டுக்கும் பொதுவானவையாக இருப்பினும், அதன்கீழ் உரிய கட்டமைப்புக்களை நிர்வகிப்பதற்கான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும், விசேட சட்டங்களுக்கான தேவைப்பாடுகள் உள்ள போதிலும், அவை தவறான நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படாத வண்ணம் அவற்றை மாற்றியமைக்க வேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்தினார். அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, இது பற்றியும் சுமந்திரனுடன் விரிவாகக் கலந்துரையாடினார்.

## ரணில், சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்தடுத்து யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய எதிர்வரும் 30ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவும், 31ஆம் திகதி சஜித் பிரேமதாஸவும் யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர்.

இதேநேரம் மற்றுமொரு ஜனாதிபதி வேட்பாளரானநாமல்ராஜபக்ஷவும்அடுத்த மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வருகை தரத் திட்டமிடப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.



# நமது கருத்து

## நின்று கொல்லும் நீதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய ஆட்சி காலம் பெரும்பாலும் இன்னும் 39 நாள்கள் தான்.

தமக்கு தற்போது கிடைத்த இந்த இரண்டு ஆண்டு கால ஜனாதிபதி பதவியில், தமது அதிகாரத்தின் எல்லையை வானளாவக் கருதிக் கொண்டு, நீதித்துறையோடும் அவர் முரண்டு பிடித்தார். இப்போது இந்தப் பதவி காலத்தின் முடிவிலும் நீதித்துறையுடனான அவரது சுரண்டல் - நெருடல் - நீடிக்கப் போகின்றது என்றே தோன்றுகின்றது.

இந்த இறுதிக் கட்டத்திலும் அவருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

அவரின் இந்த 38 நாள் பதவிக் காலத்துக்குள் நீதிமன்றம் தலையிட்டு வழக்குத் தொடர்பில் நிவாரணம் ஏதும் பெற்றுத்தர முடியுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால் அவருக்குக் கடைசி நேரம் வரை நீதிமன்றத்துடனான நெருடல் நீடிக்க போகின்றது என்பதுதான் அனுபவப்பட்டறிவாக அமையப் போகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்கத் தவறியதன் மூலம் குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளார் என அறிவிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஆர்.எஸ்.பி. ரணசூரிய என்பவரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரைப் பிரதிவாதிகளாகப் பெயரிட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி விக்கிரமசிங்க வேட்பாளராகப் போட்டியிடுவதைத் தடுக்கும் வகையில் இடைக்கால நிவாரணம் வழங்குமாறும் மனுதாரர் கோரியுள்ளார். எனினும் அந்த நிவாரணத்தை நீதிமன்றம் வழங்குவதற்கான சாத்தியங்கள் இல்லை என்றே கருதப்படுகின்றது.

மேலும் உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவின்படி, தகுந்த - மூத்த - பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரைத் தற்காலிக பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்க ஜனாதிபதிக்கு உத்தரவிட வேண்டும் என்றும் மனுதாரர் கோரியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் வேட்பாளராக இருப்பதால், பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் தமக்கு இல்லை என ஜனாதிபதி பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ள மனுதாரர், அரசமைப்பின் கீழ் தனக்கு உள்ள அதிகாரங்கள் குறித்து தனது சொந்த நிலைப்பாட்டிற்கு முரணான நிலையில், ஜனாதிபதி ஒகஸ்ட் 12 ஆம் திகதி அலி சப்ரியை நீதி அமைச்சராக நியமித்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்காமல் விட்டதன் வாயிலாக மக்கள் மற்றும் நாட்டின் பாதுகாப்பை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளார் ஜனாதிபதி. அதன் மூலம் அரசமைப்பின் 41(சி) (அ) பாகம் 2 (சி) பிரிவை அவர் மீறியுள்ளார் எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

நீதித்துறையோடு முரண்டு பிடிப்பவருக்கு கடைசி நேரத்திலும் நீதிமன்ற சிக்கல் நீள்கின்றது.

இந்தத் தேர்தலோடு அவர் பதவியில் இருந்து இறங்க நேரிட்டால், அதன் பின்னர் நீதிமன்றத்தில் தவம் கிடப்பது அவரது எஞ்சிய வாழ்நாளின் அவலமாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

# சமூக நீதி என்பது இந்திய அரசின் உயர் முன்னுரிமையாக உள்ளது

## குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு 78 ஆவது சுதந்திர தினம் உரை



“சமூக நீதி என்பது அரசின் உயர் முன்னுரிமையாக உள்ளது. பாலின நீதி மற்றும் பருவநிலை நீதி ஆகிய இரண்டு அம்சங்களை நான் வலியுறுத்துகின்றேன். நாட்டில் சமூக நிலைகளின் அடிப்படையில் கருத்து வேறுபாட்டை தூண்டும் போக்குகள் யாவும் புறக்கணிக்கப்படும் என்பது எனது திடமான நம்பிக்கை.”

– இவ்வாறு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

78 ஆவது சுதந்திர தினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய உரையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

“அரசியல் சாசனத்தின் 75 ஆவது ஆண்டு தினத்தை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். புதிதாக சுதந்திரம் பெற்ற நாட்டின் பயணம், இடையூறுகள் இல்லாமல் இருக்க வாய்ப்பில்லை. உலக அரங்கில் இந்தியா தனது உரிமை மிகு இடத்தை பெறுவதற்கு, நீதி, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகிய அரசியல் சாசன லட்சியங்கள் மீது நாம் உறுதியாக நிற்கிறோம்.

இந்த ஆண்டு நமது நாட்டில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. தகுதி வாய்ந்த வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 97 கோடியாக இருந்தது. இது ஒரு வரலாற்றுச் சாதனை. மனித குலம் முன் எப்போதும் கண்டிராத மிகப் பெரிய தேர்தல் நடைமுறையை இது குறிக்கிறது. இத்தகைய மாபெரும் நிகழ்வை எத்தகைய குறைபாடுகளும் இன்றி சுமூகமாக நடத்தியதற்காக இந்திய தேர்தல் ஆணையம் பாராட்டப்பட வேண்டும்.

இந்த நடைமுறையின் போது, கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல், வாக்காளர்களுக்கு உதவிய அனைத்து அதிகாரிகளுக்கும், பாதுகாப்புப் பணியாளர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன். இத்தகைய பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தங்கள் வாக்குரிமையை செலுத்திய போது, அது ஜனநாயக கொள்கைக்கான மகத்தான வாக்காக திகழ்கிறது. இந்தியாவின் வெற்றிகரமான தேர்தல் நடைமுறைகள், உலகம் முழுவதும் உள்ள ஜனநாயக சக்திகளை வலுப்படுத்துகிறது.

சமூக நீதி என்பது அரசின் உயர் முன்னுரிமையாக உள்ள நிலையில், இதன் மூலம் பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் நலனுக்காக இதுவரை இல்லாத வகையில், எண்ணற்ற முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பிரதமரின் சூரஜ் எனப்படும் சமூக மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு அடிப்படையிலான பொது நலத் திட்டம், சமுதாயத்தின் நலிந்த பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு நேரடி நிதியுதவி வழங்க வகை செய்கிறது.

பிரதமரின் ஜன்மன் எனப்படும் பிரதமரின் பழங்குடியினர் ஆதிவாசி பரிபாலனத் திட்டம், எளிதில் பாதிப்புக்கு ஆளாகக்கூடிய பழங்குடியின குழுக்களின் சமூகப் பொருளாதார சூழல்களை மேம்படுத்துவதற்கான மாபெரும் இயக்கமாக மேற்கொள்ளப்படுகிறது. நமஸ்தே எனப்படும் இயந்திர மயமாக்கப்பட்ட துப்புரவு சூழலியலுக்கான தேசிய செயல் திட்டம், எந்தவொரு துப்புரவு தொழிலாளரும், கழிவுநீர் மற்றும் மலக்கழிவு தொட்டிகளை சுத்தம் செய்வதற்காக இயந்திர உதவியின்றி, பணியாற்றாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

‘நீதி’ என்ற சொல், பல்வேறு சமூக அம்சங்களை உள்ளடக்கிய, விரிவான சாத்தியமான உணர்வின் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் பாலின நீதி மற்றும் பருவநிலை நீதி ஆகிய இரண்டு அம்சங்களை மட்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். நமது சமுதாயத்தில், பெண்கள் சமமாக மட்டுமின்றி, சமம் என்பதற்கு மேலாகவே மதிக்கப்படுகின்றனர். எனினும், அவர்களும் பாரம்பரிய நியதிகளால் பாதிக்கப்படுகின்றனர். ஆனால், மகளிர் நலன் மற்றும் மகளிருக்கு அதிகாரமளிப்பதற்கு இந்த அரசு சம முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.”– என்றார்.

# வேதாரண்யம் மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் தாக்குதல்



வேதாரண்யம் மீனவர்கள் நால்வரை இலங்கையை சேர்ந்த தமிழ் மீனவர்கள் கடுமையாகத் தாக்கி விரட்டி அடித்துள்ள சம்பவம் தமிழக மீனவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அருகேயுள்ள ஆறுகாட்டுத்துறை மீனவ கிராமத்தைச் சேர்ந்த ராசப்பன் சந்திரகாசன் (வயது 70) என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் ஆறுகாட்டுத் துறையில் இருந்து புஷ்பவனத்தைச் சேர்ந்த முத்துகிருஷ்ணன் (வயது 70), ராஜேஷ் (வயது 26), பன்னீர்செல்வம் (வயது 50), வேல்முருகன் (வயது 36) ஆகிய நான்கு மீனவர்களும் நேற்று முன்தினம் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

கோடியக்கரைக்கு கிழக்கே 15 கடல்மைல் தொலைவில் அவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது இரவு 10.30 மணியளவில் இரண்டு படகுகளில் அங்குவந்த இலங்கையைச் சேர்ந்த தமிழ் பேசத் தெரிந்த 6 நபர்கள் வேதாரண்யம் மீனவர்களின் படகை சூழ்ந்து கொண்டு அவர்களின் படகில் ஏறி நான்கு பேரையும் வாள்களை கழுத்தில் வைத்து மிரட்டியும், இரும்புப் பைப்புகளை கொண்டு தாக்கியும் உள்ளனர்.

அத்துடன், படகில் இருந்த 700 கிலோ வலைகளை எடுத்துக் கொண்டு அங்கிருந்து சென்றுள்ளனர்.

இதையடுத்து, காயமடைந்த நான்கு மீனவர்களும் நேற்று மதியம் ஆறுகாட்டுத்துறை கடற்கரைக்கு திரும்பினர். அவர்களின் முதுகின் பின்புறத்தில் இரும்பு பைப்பால் அடித்ததில் உள்காயம் ஏற்பட்டுள்ளதால் அவர்கள் உடனடியாக வேதாரண்யம் அரசு தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

வேதாரண்யம் மீனவர்கள் மீண்டும் மீண்டும் இலங்கை தமிழ் மீனவர்களால் தாக்கப்படுவது தமிழக மீனவர்கள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. வேதாரண்யம் கடலோர காவல் நிலைய பொலிஸார் இது குறித்து விசாரணை செய்து வருகின்றனர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# தாய்லாந்து பிரதமர் பதவியிலிருந்து நீக்கம்

தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் அரசியலமைப்பை மீறினார் என நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ஒருவரை அமைச்சரவை உறுப்பினராக நியமித்ததன் மூலம் நெறிமுறைகளை மீறியதன் அடிப்படையில் இப்பதவி நீக்க உத்தரவு வழங்கப்பட்டதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு தேர்தலில் அதிக இடங்களைப் பெற்ற நாட்டின் பிரபலமான முற்போக்கு மூவ் ஃபார்வர்ட் கட்சியை நீதிமன்றம் கலைத்து, அதன் தலைவர்களை 10 ஆண்டுகளுக்கு அரசியலில் இருந்து தடை செய்து ஒரு வாரத்திற்குப் பிறகு இத்தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல தொழிலதிபரும், அரசியலுக்கு புதியவருமான பிரதமர் ஸ்ரேத்தா, சிறையில் அடைக்கப்பட்ட ஒரு வழக்கறிஞரை அமைச்சரவையில் நியமித்ததன் மூலம் நெறிமுறை விதிகளை மீறியதாக பாங்கொக்கின் அரசியலமைப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

நீதிமன்றத்தின் 9 நீதிபதிகளில் ஐவர், ஸ்ரேத்தாவையும் அவரது அமைச்சரவையையும் பதவி நீக்கம் செய்கின்றோம் என வாக்களித்தனர்.

இதனையடுத்து தாய்லாந்தில் அரசியலமைப்பின் படி புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# மத்திய கிழக்கில் நிலவும் பதற்றத்தை குறைப்பதே அமெரிக்காவின் நோக்கம்



இஸ்ரேல் மீது, ஈரான் பதிலடி தாக்குதல் நடத்தும் என்ற அச்சத்தால் மத்திய கிழக்கில் நிலவும் பதற்றத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்கத் தூதுவர் லிண்டா தோமஸ்-கிரீன்ஃபீல்ட் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கால தாக்குதலைத் தடுக்கவும், பிராந்திய மோதலைத் தவிர்க்கவும் அமெரிக்கா விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் டெஹ்ரானில் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஈரான் இஸ்ரேலுக்குப் பதிலடி கொடுக்கக்கூடும் என்ற அச்சம் நிலவிவருகிறது.

எனினும், இந்த சம்பவத்துக்கு இஸ்ரேல் பொறுப்பேற்கவில்லை.

இதேநேரம், இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தத்தை எட்டுவது, இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்துவதைத் தடுக்க உதவும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பரிந்துரைத்துள்ளார்.

# ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா பதவி விலகுவதற்குத் தீர்மானம்



ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா பதவி விலகத் தீர்மானித்துள்ளார்.

இந்த மாதத்திற்குள் அவர் பதவி விலகத் தீர்மானித்துள்ளார் என சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், அவரது பதவிக் காலம் 3 வருடங்களுடன் நிறைவடையவுள்ளது.

# இன, மத ரீதியாகப் பயணிக்க முற்படும் எதிரணி ரவூப் ஹக்கீமின் கருத்துக்கள் ஏற்க முடியாதவை

## ஜீவன் தொண்டமான் விசனம்



"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தமது அரசாங்கம் ஆட்சியமைத்தால் கிழக்கிற்கு மத ரீதியான ஆளுநர் ஒருவரைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார். இதன் மூலம் அந்த அரசாங்கம் எவ்வாறானதாக இருக்கும் என்பதை புரிந்து கொள்ள முடியும்."

– இவ்வாறு நீர் வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாமும் ஜனாதிபதியும் 100 நாள் வேலைத்திட்டத்துக்கமைய செயற்பட்டு வருகின்றோம். எனவே புதிதாக ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதற்கு ஒன்றும் இல்லை. 18ஆம் திகதி கொட்டகலையில் எமது தேசிய சபை கூடி ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதைத் தீர்மானிக்கும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தான் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார் எனவும், அதற்கமைய அடுத்து தமது அரசாங்கம் ஆட்சியமைத்தால் கிழக்கில் மத ரீதியாக ஒரு ஆளுனரைப் பெற்றுக் கொள்ளலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். மத ரீதியாக ஒரு அமைச்சர் கிடைப்பார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எமது அரசாங்கத்தில் நாம் இலங்கையர் என்ற ரீதிலேயே சிந்திக்கின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பாகுபாடு எம்மிடம் இல்லை. இலங்கையராக நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதே எமது நோக்கமாகும். ஆனால் இவர்கள் குறிப்பிடும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களது அரசாங்கம் எவ்வாறானதாக இருக்கும் என்பதை கணிப்பிட முடிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தோல்விடைவார் என்றும் அவருக்கு வெற்றி பெறத் தெரியாது என்றும் சிலர் கூறுகின்றனர். மத மற்றும் இன ரீதியான தீமானங்களை எடுப்பவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை செயற்பட இடமளிக்கவில்லை. தற்போதுள்ள எதிரணியினருடன் நாம் இருந்தால் அனைவரும் புத்தர், அவ்வாறில்லை என்றால் அனைவரும் கள்வர் என்ற நிலைப்பாட்டிலேயே அவர்கள் உள்ளனர்."– என்றார்.

# தமிழ் மக்கள் யாருக்கு ஆதரவு? அவர்களிடமே விட்டு விடுங்கள்

## இப்படி சீ.வீ.கே. சிவஞானம் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

தமிழர் தரப்பு ஆதரிக்கும் வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைவார் எனச் சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண அவைத் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் மூத்த துணைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம், அதனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை மக்களிடமே விட்டுவிட வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழரசுக் கட்சியின் கடந்த மத்திய குழுக் கூட்டத்தில் மிக முக்கியமாக ஒரு விடயத்தை நான் கூறியிருந்தேன். அதாவது நாங்கள் ஒரு வேட்பாளரை தனித்து ஆதரிக்கக் கூடாது என்று மத்திய செயற்குழுவில் முன்வைத்திருக்கின்றேன்.

குறிப்பாக அதற்கு முக்கிய காரணம் எந்தவொரு வேட்பாளரை நாங்கள் ஆதரித்து அதற்குக் கை காட்டுகின்றோமோ அவர் தோற்பார் என்பதாகவே கடந்த கால நிலைமைகள் காட்டுகின்றன.

கடந்த 2005 இல் கூட ரணிலுக்கு ஆதரவான ஒரு நிலை இருந்த போதும் பின்னர் அது பகிஷ்கரிப்பு என்று மாறினாலும் கூட ரணில் தோல்வியுற்றிருந்தார்.

எனவே, நாங்கள் ஒருவரை ஆதரிப்பதாகக் கூறுகின்ற போது அதை வைத்துத் தமிழர்களுக்குச் சாதகமாக நாட்டை விற்கப் போகின்றார்கள் என்று தென்னிலங்கையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. அது தோல்வியை ஏற்படுத்துவதாக அமையலாம்.

இந்த முறையும் சஜித் பிரேமதாஸ எங்களுடன் வந்து கதைத்துவிட்டுச் சென்ற அடுத்தநாளே தென்னிலங்கையில் இனவாதம் கக்கப்பட்டு பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.




இவ்வாறான நிலைமையில் இன்றைக்கு மக்களுக்கு எல்லாம் தெரியும். அவர்களுக்கு ஒன்றும் தெரியாத போலவும் நாங்கள் சொல்லித்தான் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நிலையிலும் நான் இல்லை.

நாங்கள் தனி நபரை – தனி வேட்பாளரைச் சுட்டிக் காட்டி சிபார்சு செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை மத்திய செயற்குழுவில் நான் தெரிவித்திருக்கின்றேன்.

ஆனாலும், வாக்களிப்பது என்பது ஜனநாயக உரிமை. எனவே அனைவரும் வாக்களிக்க வேண்டும். அதற்காக நான் பகிஷ்கரிப்புக்கு ஆதரவானவன் இல்லை.

இன்னுமொருவரைக் கை காட்டுகின்றபோது அவர் தோல்வியடைந்தால் அதற்குப் பிறகு மற்றவருடன் பேசுவதென்பது சிக்கலான நிலைமை. அது அப்படித்தான் இருக்கும். அதுவே இயற்கை. ஆனபடிநால் நாங்கள் பிறிதாக இருப்போம்.

எமது மத்திய குழு மீண்டும் எதிர்வரும் 18 ஆம் திகதி கூடுகின்றபோது அதில் சிலநேரம் நாங்கள் ஒரு முடிவுக்கு வரக் கூடியமாக இருக்கும். அதில் ஏகமனதான முடிவு வருவதற்கான வாய்ப்புக்கள் இல்லை." – என்றார்.




# சஜித்துக்கு சம்பிக்க ஆதரவு!

நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய குடியரசு முன்னணி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்துகொண்டது.

தலவத்துகொட கிராண்ட் மொனார்க் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற நிகழ்விலேயே சஜித் அணியினருடன் சம்பிக்க குழுவினர் இணைந்து கொண்டனர்.














# ஜனாதிபதி வேட்பாளர் ஜனக்க ரத்நாயக்கவிடம் 3 கோடி ரூபா இலஞ்சம் பெற்ற எழுவர் சிக்கினர்

ஜனாதிபதி வேட்பாளர் ஜனக்க ரத்நாயக்கவுக்கு எக்சத் லங்கா பொதுஜன கட்சியின் உறுப்புரிமையை வழங்குவதற்கு மூன்று கோடி ரூபா இலஞ்சம் பெற்றனர் எனக் கூறப்படும் எழுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இராஜகிரியவில் நேற்று நடத்திய சுற்றிவளைப்பின்போது அவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமது கட்சியில் ஜனாதிபதி வேட்பாளருக்கான சந்தர்ப்பத்தை வழங்குவற்காக 3 கோடி ரூபா இலஞ்சம் கோரினர் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் கட்சி செயலாளரும் உள்ளடங்குகின்றார்.

எக்சத் லங்கா பொதுஜன கட்சியின் சார்பில் நேற்று முற்பகல் கட்டுப்பணம் செலுத்திய பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக்க ரத்நாயக்க முன்வைத்த முறைப்பாட்டை அடுத்தே, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# காத்தான்குடி விபத்தில் இளைஞர் ஒருவர் பலி!

(பழுவூரான்)

மட்டக்களப்பு – காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

காத்தான்குடிப் பிரதான வீதி, மீராபாலிகா மகளிர் கல்லூரிக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை தலைக்கவசமின்றி செலுத்தி வந்த இரு இளைஞர்கள் முன்னால் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதுண்டதால் இந்த விபத்துச சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த முஹம்மது சஹ்ரான் (வயது – 20) என்பவரே பலியாகியுள்ளார்.

பின்னால் அமர்ந்து பயணம் செய்த இளைஞர் படுகாயம் அடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேநேரம் முன்னால் வந்த மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.





இந்த விபத்துச் சம்பவத்தால் மோட்டார் சைக்கிள்களுக்குப் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

மரணமானவரின் சடலம் காத்தான்குடி ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# யாழ். போதனாவுக்கு மருந்துப் பொருள்கள் கையளிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மருந்துப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.

உமந்தவ சர்வதேச பௌத்த கிராமத்தின் சார்பில் சிறீ சமந்தபத்ர மகா ஆராத் தேரரினால் குறித்த மருந்துப் பொருள்கள் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கைய ளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று மதியம் நடைபெற்ற நிகழ்வில் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் யமுனானந்தா, கண் வைத்திய நிபுணர் மலரவன், யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# தேசிய காங்கிரஸும் ரணிலுக்கு ஆதரவு!

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள், ஜனாதிபதியை நேற்று சந்தித்து தமது ஆதரவை உறுதிப்படுத்தினர்.

அத்துடன், தேசப்பற்றுள்ள மக்கள் முன்னணியின் தலைவர் சுகத் ஹேவாபத்திரன உள்ளிட்ட அக்கட்சியின் பிரதிநிதிகள் குழுவும் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.







# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்பு!

**(மஸ்கெலியா நிருபர்)**

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று புதன்கிழமை மதியம் மீட்கப்பட்டது என்று தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் கடந்த திங்கட்கிழமை திடீரெனக் காணாமல்போயிருந்தார். மேற்படி இளைஞரைத் தேடும் நடவடிக்கையை உறவினர்கள் முன்னெடுத்தபோதும் அது பயனளிக்கவில்லை. அதன் பின்னர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் உறவினர்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்தநிலையிலேயே மேற்படி இளைஞர் நேற்று சடலமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் மிதந்து கொண்டு இருந்ததைப் பிரதேசவாசிகள் கண்டு தலவாக்கலைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

அதனையடுத்து, பொலிஸாரால் சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் தலவாக்கலை மேற்பிரிவு தோட்டப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய டி.மதுஸான் என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தலவாக்கலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனமல்வில மாணவி துஷ்பிரயோகம்: நான்கு சந்தேகநபர்களுக்கும் பிணை!

தனமல்வில பாடசாலையொன்றில் மாணவி ஒருவர் ஒரு வருட காலமாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தை மறைத்த குற்றச்சாட்டில் கைதான 4 சந்தேகநபர்களும் தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த பாடசாலையின் அதிபர், ஒரு ஆசிரியர் மற்றும் 2 ஆசிரியைகள் நேற்றுமுன் தினம் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மாணவி துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சம்பவம் தொடர்பான விபரங்களைப் பொலிஸாரிடம் தெரிவிக்காமை மற்றும் அதனை மறைக்க முற்பட்ட குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீடு உடைத்துப் பணம் கொள்ளை!




**(நுவரெலியா நிருபர்)**

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள வீடொன்று உடைக்கப்பட்டு பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா – லபுக்கலை குடாஓயா பகுதியிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு தாய் மற்றும் மகன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த நேரம் வீட்டின் ஜன்னலை உடைத்து உள்நுழைந்த மர்ம நபர்கள், வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பணப்பையில் இருந்த 20 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் வீட்டார் நேற்று புதன்கிழமை முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மொட்டுக் கட்சியின் அதிகாரத்தை இலகுவில் கைப்பற்றிவிட முடியாது

## இப்படிக் கூறுகின்றார் அக்கட்சி எம்.பி. இந்திக்க அனுருத்த

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அதிகாரத்தை அவ்வளவு எளிதில் கைப்பற்றிவிட முடியாது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, தேர்தலின் பின்னர் மொட்டுக் கட்சியை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ள தமது அணி கைப்பற்றும் என எஸ்.எம். சந்திரசேன எம்.பி. தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த இந்திக்க அனுருத்த கூறியவை வருமாறு:-



"புதிய சக்தியொன்றைக் கட்டியெழுப்புவதாகக் கூறிவிட்டே கட்சியிலிருந்து சென்றனர். அவ்வளவு எளிதில் மொட்டுக் கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட முடியாது. நாமும் அரசியலில்தான் இருக்கின்றோம். முடிந்தால் கைப்பற்றி காட்டட்டும். இவ்வாறு சொல்வபர்கள் கடைசியில் மொட்டுக் கட்சியில் வந்துதான் சரணடைவார்கள்.

கட்சியின் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். மனுஷ நாணயக்கார, ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மதிக்கின்றோம். இவர்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது. கட்சி கொள்கைகளுக்கு எதிராக செயற்படும் தரப்புகளுக்கு அனைத்து கட்சிகளும் இவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்." - என்றார்.




# தெற்கு அதிவேக வீதியில் விபத்து! 2 வயது சிறுமி பரிதாப உயிரிழப்பு!!

வாகன விபத்தில் இரண்டு வயதுடைய சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெற்கு அதிவேக வீதியில் நேற்று புதன்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மத்தலயில் இருந்து கொட்டாவ நோக்கிப் பயணித்த வானின் சக்கரமொன்றில் காற்று வெளியேறியதால் குறித்த வான்வீதியின் நடுவில் உள்ள பாதுகாப்பு வேலியில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தின்போது, வானில் பயணித்த மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்துள்ள நிலையில் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

கதிர்காமம், ஓர்டோகந்த பகுதியைச் சேர்ந்த இரண்டு வயதுடைய சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து இடம்பெற்றபோது வானில் சிறுவர்கள் உட்பட 12 பேர் பயணித்துள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்று திருக்கோவில் வலய தமிழ் மொழி தினப் போட்டி!

**(வி.ரி.சகாதேவராஜா)**

திருக்கோயில் வலய தமிழ் மொழித் தின போட்டி இன்று (15) வியாழக்கிழமை திருக்கோவில் வலயத்திலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது .

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இ. உதயகுமார் தலைமையில் நடைபெற இருக்கும் இந்த நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துள்ளா ஆகியோர் கலந்து கொள்வர்.

காலை 8 மணிக்கு தமிழ் மொழி தின பண்பாட்டு ஊர்வலம் இடம்பெறவுள்ளது. அதன் பிறகு ஏனைய நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக இடம்பெறும்.



# சுதந்திரக் கட்சி தலைமையிலான சில கட்சிகள் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டணி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான புதிய கூட்டமைப்பு உள்ளிட்ட முற்போக்கு இடதுசாரி கட்சிகள் சில, ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவான பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டணி அமைத்துள்ளன.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வின் போது கூட்டணிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

புதிய கூட்டணியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரிய தர்ஷன யாப்பா நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டணியின் செயலாளராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர், இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண நியமிக்கப்பட்டுள்ளதுடன் பொருளாளராக இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க செயற்படவுள்ளார்.

புதிய கூட்டணியின் ஆலோசகராக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், புதிய கூட்டணியின் தேசிய அமைப்பாளர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்கவும் வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

















# கொழும்பில் இன்று விசேட பாதுகாப்பு

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யும் தினமான இன்று விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய இந்த விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

இந்தப் பாதுகாப்பு திட்டங்களுக்கு விசேட அதிரடிப்படையினரின் உதவியும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராஜகிரியவில் உள்ள தேர்தல் அலுவலகத்தை அண்மித்த வீதிகளில் இன்று விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் வேட்பாளர்களுடன் வருகைதரும் பிரதிநிதிகளின் எண்ணிக் கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளருடன் கட்சி யின் செயலாளர் உட்பட இருவருக்கு மாத்திரமே வேட்புமனு ஏற்கும் அலுவ லகத்திற்குள் பிரவேசிக்க அனுமதிய ளிக்கப்படும் என தேர்தல்கள் ஆணை யாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அவர்களைத் தவிர மேலும் மூவர் தேர்தல் அலுவலக வளாகத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில், இன்று காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக் கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.



# ரிஷாத்தின் கட்சி சஜித்தின் பக்கம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விற்கு ஆதரவளிக்கவுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலை வர் றிஷாட் பதியுதீன் அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று மாலை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள் ளார். கட்சியின் உயர்பீடம் கூடி சஜித் பிரேம தாஸவிற்கு ஆதரவளிப்பது தொடர்பான தீர்மானத்தை மேற்கொண் டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மனுஷ நாணயக்காரவின் இடத்துக்கு பந்துல லால் பண்டாரிகொட நியமனம்

## வர்த்தமானியில் வெளியீடு

மனுஷ நாணயக்காரவின் வெற்றிடமான நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பந்துல லால் பண்டாரிகொடவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற தீர்ப்பையடுத்து ஏற்பட்ட பதவி வெற்றிடத்திற்கு பந்துலால் பண்டாரிகொடவை நியமிக்கத் தீர்மானித்து அவரின் பெயரை ஐக்கிய மக்கள் சக்தி தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பியிருந்தது.



இந்த நிலையில் பந்துல லால் பண்டாரிகொடவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அண்மையில் மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் சட்டபூர்வமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்னணியில் குறித்த இருவரும் அமைச்சுப் பதவிகளிலிருந்தும் விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொது வேட்பாளர் மக்களைப் பாதுகாக்கவா? தோல்வி அடைந்த ரணிலைப் பாதுகாக்கவா?

## ஜே.வி.பியின் சந்திரசேகரன் கேள்வி

"தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான எண்ணத்தை மாற்றி தோல்வி அடைந்த ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைக்கும் முயற்சியாக அமைவதாக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் குற்றச்சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அவர் ஊடாக பிரதிபலிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்டது.

இந்த உருவாக்கத்தின் பின்னணியில் சிவில் அமைப்புகள், புத்திஜீவிகள் பலர் பங்காற்றிய நிலையில், அவர்களுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பில் கையப்பமிட்ட தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதியிடம் ஓடிச் சென்று பேசிய நிகழ்வு இந்த வாரம் இடம்பெற்றது.

தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை




நியமித்த நோக்கத்தை தாண்டி அதன் கட்டமைப்பை சிதைத்து தற்போதைய ஜனாதிபதியும் எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்ததன் மூலம் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றில் தமிழ் மக்களை அழித்த வரலாறுகளே அதிகமாக காணப்படுகின்ற நிலையில் தமிழ் கட்சிகள் ரணிலுடன் பேசுவது தமது மக்களை ஏமாற்றும் ஒரு செயலாகும்.

1983 கலவரம், அவசரகால சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம், மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் வன்முறை மற்றும் யாழ் பொது நூலக எரிப்பு போன்றவற்றில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது இரசித்துக்கொண்டிருந்தவர் வேறு யாரும் அல்லர், ஐக்கிய தேசியக் கட்சியுன் ரணில் விக்கிரமசிங்கவும்தான்.

இவற்றையெல்லாம் மறந்த தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் காலை நக்கி அரசியல் பிழைப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கும், பணப்பெட்டி அரசியலை மேற்கொள்வதற்காகவுமா பேச்சுக்குச் சென்றார்கள் என சந்தேகம் எழுகிறது.

ரணில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்கிறேன் எனக்கூறி 83 பில்லியனாக இருந்த நாட்டின் கடனை சுமார் 100பில்லியனாக மாற்றிய பெருமையுடையவர்.

ஊழலற்ற ஆட்சியை ஏற்படுத்துவதற்கும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் தேசிய மக்கள் சக்தியுடன் நாட்டில் உள்ள மக்கள் ஒன்று சேர ஆரம்பித்துள்ளனர்.

ஆகவே தமிழ் மக்களை ஏமாற்றிய ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ் கட்சிகள் உறவை மேற்கொள்வது பொது வேட்பாளரை பாதுகாக்கவா அல்லது ரணில் விக்ரமசிங்கவை பாதுகாக்கவா என தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்."

– என்றார்.

# நடுத்தரவர்க்க வரி செலுத்துவோருக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பரிந்துரை

தனிநபர் வருமான வரி எல்லையை 5 லட்சம் ரூபாயிலிருந்து 7 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயாக மாற்றியமைக்க சர்வதேச நாணய நிதியத்திற்கு அரசாங்கம் பரிந்துரைத்துள்ளது.

இந்த வருட வரி வருவாயின் வலுவான செயல்திறன் காரணமாக, கடந்த கால வரி சீர்திருத்தங்களால் பாதிக்கப்பட்ட நடுத்தர வர்க்க வரி செலுத்துவோருக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கத்துடன் இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி பரிந்துரைக்குச் சர்வதேச நாணய நிதியம் திருத்தங்களை முன்மொழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.





# செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணம் பல்கலை வளாகத்தில்

செஞ்சோலை படுகொலையின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர்களின் உருவப்படங்களுக்கு பல்கலைக் கழக மாணவர்களால் சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தலில் பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண் டிருந்தனர்.

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியிலிருந்த செஞ் சோலை சிறுவர் இல்லத்தின் மீது கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி விமான படையினர் மேற்கொண்ட விமான குண்டு வீச்சில் 54 மாணவிகளும் 7 பணியாளர்க ளுமாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 150க்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்திருந்தனர்.













# இன்றைய ராசி பலன்கள் - 15.08.2024




இன்று மகிழ்ச்சியான மனநிலையை வளர்த்துக்கொள்வது முக்கியம். கவலைப் படுவதையும் உணர்ச்சி வசப்படுதலையும் இன்று தவிர்க்க வேண்டும்.

இன்று வேலைப் பளு அதிகமாகக் காணப்படும். பணிகளில் திட்டமிடல் அவசியம். உண்மையான உழைப்பு வெற்றியைப் பெற்றுத் தரும்.

உணர்ச்சி வசப்படுதலை தவிர்ப்பதன் மூலம் உறவில் பாதிப்புகளை தவிர்க்கலாம். நட்பு முறையுடன் பழகினால் நல்ல புரிந்துணரவு வளரும்.

பணவரவு அதிகமாக காணப்படும். இன்று தேவை யில்லாத செலவினங்களும் ஏற்படலாம். எனவே உங்களால் செலவை கட்டுப்படுத்த இயலாது.




மன அழுத்தத்தை விரட்ட உற சாகத்தை கடைப் பிடிக்க வேண்டிய நாள். இன்று கவனக்குறைவு ஏற்படலாம். எதையும் எளிதாக எடுத்துக்கொள்வதன் மூலம் வெற்றி காணலாம்.

பணியிட அழுத்தம் காரணமாக பணி யில் தொய்வு ஏற்படலாம். பொறுமையை கடைபிடிப்பதன் மூலம் திறமையாக பணிகளை கையாளலாம்.

நட்புடன் பழகுவதன் மூலம் துணையாருடன் நல்லுறவு மேம்படும். அவரின் விருப்பப்படி செயல்படுவதன் மூலம் சந்தோஷம் கிட்டும்.

இன்று பணவரவு திருப்திகரமாக இல்லை. கூடுதல் செலவினங்கள் கவலையை ஏற்படுத்தும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. குளு மையான உணவுகளை தவிர்க்க வேண்டும்.




இன்று நீங்கள் புதிய முயற்சிகளில் இறங்கலாம். நீங்கள் செய்யும் செயலை சரியாக முடிப்பீர்கள். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் சரியானதாக இருக்கும்.

இன்று வேலையில் முன்னேற்றம் காணப்படுகின்றது. உங்களின் தனிப்பட்ட திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களின் நகைச்சுவை பேச்சால் உங்கள் துணையாரை கவர்வீர்கள். ஆதனால் அன்யோன்யம் பெருகும்.

இன்று பணவரவு உற்சாகத்தைத் தரும். அதிக பணவரவால் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக உள்ளது. ஆரோக்கியமான மன நிலையால் உங்கள் உடல் நிலை நன்கு பராமரிக்கப்படும்.




இன்று நீங்கள் புதிய முயற்சிகளில் இறங்கலாம். முன்னேற்றமும் திருப்தியும் நிறைந்த நாளாக அமையும். பயணங்களால் ஆதாயம் உண்டாகும்.

இன்று பணியிடத்தில் அமைதி நிலவும். உற்சாகத்துடனும் உடனுக்குடனும் வேலை செய்வீர்கள். அதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

இன்று நீங்கள் உங்கள் துணையாருடன் வெளியிடங்களுக்குச் செல்வீர்கள்.

இன்று பணவரவு காணப்படும். பணவரவு உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் சந்தோஷமான மனநிலை உங்களுக்கு ஆரோக்கியத்தை பெற்றுத் தரும். இன்று உங்கள் உடல் நிலையில் எந்தக் குறைபாடும் இருக்காது




இன்று யதார்த்தமாக செயல்பட வேண்டிய நாள். பெரிய எதிர்பார்ப்புக ளுடன் செயலாற்றாதீர்கள். ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

இன்று அதிக பணிச்சுமை காரண மாக பணியை திறம்பட செய்வதில் சில தடைகள் இருக்கும்.

கணவன் மனைவி இடையே உணர்ச்சி வசப்படாமல் செயலாற்ற வேண்டும். அதன் மூலம் நல்லுறவையும் மகிழ்ச்சியையும் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று கூடுதலாக செலவு செய்ய நேரிடலாம். எனவே இன்று செலவுகளை சமாளிப்பதில் சிறிது கஷ்டம் இருக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இல்லலை. மன அழுத்தத்தின் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் கவலைகளால் பாதிக் கப்படும் நாள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் நீங்கள் உணர்ச்சி வசப்படாமல் இருந்து அமைதி பெறலாம்.

சவால்களை எதிர்கொள்ளும் நாள். இன்று ஓய்வின்றி உழைக்க வேண்டியிருக்கும். நன்கு பணியாற்ற அட்டவணை அமைத்து பணியாற்றுங்கள்.

உங்கள் துணையாரிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதை தவிர்ப்பதன் மூலம நல்லுறவை வளர்க்கலாம்.

இன்று வீட்டுத் தேவைகளுக்காக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும். தேவைகள் அதிகரிக்கும். அதனால் செலவும் அதிகரிக்கும்.

தாயாரின் ஆரோக்கியத்துக்காகச் செலவு செய்ய நேரிடும் அதனால் கூடுதல் செலவுகள் நேரலாம்.




இன்று உங்கள் முயற்சிகள் வெற்றி யடையும் நாள். உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். உங்கள் மனது நிறைந்திருக்கும் நாள்.

பணியில் வளர்ச்சி காணப்படும். உங்கள் பணியில் திருப்தி காண் பீர்கள். புதிய வாய்ப்புகள் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் பணிவான மற்றும் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையாரை சந்தோஷ ப்படுத்துவீர்கள். கணவன் மனைவியிடையே அன் யோன்யம் பெருகும்.

பணவரவு திருப்திகரமாக அமையும். உங்கள் கடின உழைப்புக்கான போனஸ் அல்லது ஊக்கத் தொகை பெறுவீர்கள்.ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். உங்கள் சந்தோஷமான மனநிலை காரணமாக ஆரோக்கியம் மேம்படும்.




இன்று உங்கள் மனதில் நம்பிக்கை நிறைந்திருக்கும். இன்றைய நாளில் நீங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய முக்கியமான முடிவுகளை எடுக்கலாம். இன்று மேற்கொண்ட காரியங்கள் அனைத்தும் எளிதாக நடக்கும்.

மேற்கொண்ட பணிகளை சரியான நேரத்தில் முடிப்பீர்கள். பணிகளை எளிதாகச் செய்ய இயலும்.

உங்கள் துணையுடன் சந்தோஷமான தருணங்களை பகிரந்து கொள்வீர்கள். குடும்பத்தில் நடக்கவிருக்கும் ஒரு விஷேத்தைப் பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் நன்றாக இருக்கும். எதிர்பாராத வகையில் பணவரவு கிடைக்கும்.இன்றைய நாள் ஆரோக்கியமான நாளாக உங்க ளுக்கு அமையும். சந்தோஷம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.08.2024




இன்று சில அசௌகரியங்கள் ஏற்படலாம். பொறுமையும் நேர்மறை எண்ணங்களும் இருந்தால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். திறமையாகச் செயல்பட அட்டவணையிட்டு திட்டமிடல் அவசியம்.

குடும்ப விஷயங்கள் காரணமாக கணவன் மனைவிக்குள் சச்சரவு ஏற்படும். எனினும் உங்கள் சரியான அனுகுமுறை மூலம் அதை தடுக்கலாம்.

கூடுதல் செலவினங்கள் ஏற்படலாம். உங்கள் தேவைகளை சந்திக்க சிறு கடன்களை வாங்க நேரிடலாம்.

தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்கலாம்.




இன்று யதார்த்தமாக இருக்க வேண்டிய நாள். உங்கள் காரியங்களை மேற்கொள்வதில் சில தடைகள் நேரலாம்.

அனுசரித்து போவதன் மூலம் திறம்பட பணியாற்ற முடியும். நன்கு திட்டமிட்டு செயல்பட்டால் உங்கள் திறமை அதிகரிக்கும்.

கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடு இருக்கும். அது நல்லுறவை பாதிக்கும்

நிதிநிலைமை கவலை தரும் வகையில் இருக்கும். தேவையற்ற செலவுகள் குடும்பத்தில் ஏற்படும்.

உங்கள் உணவில் கவனமாக இருக்க வேண்டும். உணவு ஒவ்வாமை ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று மகிழ்ச்சியான மன நிலை இருக்கும். உங்கள் குறிக்கோள்களை நிறை வேற்றுவீர்கள் முக்கியமான முடிவுகள் எடுப்பதன் மூலம் நன்மை கிட்டும். நீங்கள் வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள்.

உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள். உங்கள் மேலதிகாரியிடமிருந்து பாராட்டுக்களை பெறுவதற்கான நல்ல வாய்ப்பு இன்று அமைந்துள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். நல்ல புரிந்துணர்வின் மூலம் நல்லுறவை வலுப்படுத்தலாம்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் நன்கு பணம் சம்பாதிக்க இன்றைய நாள் மிகவும் அதிர்ஷ்டமான நாள்.

இன்று ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். மனதை சிந்தனையின்றி ஓய்வாக வைத்திருப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு மிதமான பலன்களையே தரும். உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். இன்று நண்பர்கள் கூட உங்கள் விரோதிகளாக மாற வாய்ப்புண்டு.

இன்று கடமைகள் அதிகமாக காணப்படும். ஓய்வின்றி உழைக்க நேரலாம்.சிறந்த முறையில் பணியாற்ற நல்ல உத்தியைக் கையாளுங்கள்.

உங்கள் பாதுகாப்பு நிலைமை பற்றி உங்கள் துணையாருடன் விவாதிக்காதீர்கள். அதனால் உறவு பாதிக்கப்படும். மேலும் கருத்து வேறுபாடுகள் உருவாகலாம்.

இன்று பண வரவும் செலவும் கலந்து காணப்படுகின்றது. பணத்தை மிச்சப்படுத்திச் சேமிக்க வேண்டியது அவசியம்.

இன்று நீங்கள் கால் வலியால் பாதிக்கப்படலாம்.




